திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (08.09.2026) மாலை சந்தித்த புதுச்சேரி தி.மு.க.வின் நிர்வாகிகள், நடைபெறவுள்ள தட்டாஞ்சாவடி தொகுதிக்கான இடைத்தேர்தல் குறித்து ஆலோசனை நடத்தினர்.

முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து செப்.12 –அன்று முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில்

திண்டுக்கல்லில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திண்டுக்கல், செப். 10-

முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து செப் 12- அன்று திண்டுக்கல்லில் முன்னாள் அமைச்சரும் கழகத் துணைப் பொதுச் செயலாளருமான ஐ.பெரியசாமி தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறதென்று திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்



வருகிற 12.09.2026, சனிக்கிழமை, காலை 09.00 மணியளவில் திண்டுக்கல், மணிக்கூண்டு, மாநகராட்சி அலுவலகம் அருகில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையிலும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி எம்.எல்.ஏ. அவர்கள் மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோரின் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

அதுசமயம் இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இன்னாள் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

கிரிக்கெட் விளையாட செல்வதாகக் கூறிவிட்டுச் சென்ற மாணவன் அடித்துக் கொலை!

மதுரை ஆனையூரில் பள்ளி மாணவர் ஆணவப்படுகொலை!

வேறு சமூகத்தைச் சேர்ந்த மாணவியுடன் நட்பு ரீதியாக பழகியதால் விபரீதம்!

மதுரை, செப். 10-

மதுரை ஆனையூர் அருகே காணாமல் போன பட்டியலின பள்ளி மாணவன் முட்புதருக்குள் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆணவப்படுகொலையா என்ற கோணத்தில் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுரை மாநகர் கூடல்நகரை சேர்ந்த யோகலெட்சுமி கருப்பசாமி தம்பதி மகன் தமிழ்செல்வன், ஆரப்பாளையம் பகுதியில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் 11 ஆம் வகுப்பு படித்து வந்துள்ளார். நேற்று காலை கிரிக்கெட் விளையாட செல்வதாக கூறிவிட்டு சென்ற மாணவன், பின்னர் விடு திரும்பவில்லை. தாய் மற்றும்உறவினர்கள் பல இடங்களில் தேடிய போது, முட்புதர் அருகே காயங்களுடன் சடலமாக மீட்கப் பட்டார். மாற்றுசமூகத்தை சேர்ந்த மாணவியிடம் தமிழ்செல்வன் பேசி வந்ததாகவும், மாணவியின் தந்தை அவரை கண்டித்த தோடு, மிரட்டியதாகவும் கூறப்படுகிறது. தனது மகனை அடித்து கொன்று விட்டதாக மாணவனின் தாய் மற்றும் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆட்கள் நடமாட்டமே இல்லாத முட்புதருக்குள் மாணவன் நீரில் கிடந்த வாறு சடலமாக மீட்கப் பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது, ஆணவப்படுகொலையா? என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கூடல்புதூர் காவல்துறையினர் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

முதல்வர் ஜோசப் விஜய் மீது உரிமை மீறல் புகார்!

சபாநாயகரிடம் தி.மு.க. துணை கொறடா கோவி.செழியன் மனு!

சென்னை, செப். 10-

தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் விஜய் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்து பேசினார். இந்நிலையில், சட்டப் பேரவையில் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை நேற்று முன்தினம் அவரது அறையில் தி.மு.க. துணை கொறடா கோவி. செழியன் மற்றும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்தனர்.

அப்போது, முதல்வர் விஜய் ஆற்றிய பதிலுரையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கருத்துகளை சுட்டிக் காட்டி, அவை தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளுக்கு எதிரானவை எனக் கூறி உரிமை மீறல் புகார் மனுவை சபாநாயகரிடம் அளித்தனர். மேலும், சட்டப்பேரவையின் மாண்பையும் விதிகளையும் கருத்தில் கொண்டு, இந்தப் புகார் குறித்து உரிய முறையில் பரிசீலித்து, முதலமைச்சர் விஜய் மீது தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த புகாரில், கடந்த கால அரசியல் மற்றும் ஆட்சி நிர்வாகம் தொடர்பான பல்வேறு விவகாரங்களை குறிப்பிட்டுப் பேசியதாக திமுக தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமல் நிராகரிக்கப் பட்டாத சர்க்காரியா கமிஷன் தொடர்பான விவகாரத்தை சட்டப்பேரவையில் முதல்வர் குறிப்பிட்டுப் பேசியது, அவை விதிகளுக்கு எதிரானது என திமுக தரப்பு தெரிவித்துள்ளது.

மேலும், அவையில் இல்லாத முன்னாள் முதல்வர் கலைஞர் மற்றும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் ஆகியோர் குறித்தும் முதல்வர் தனது உரையில் பேசியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பாக சட்டப் பேரவையில் விவாதிப்பதும் அவை விதிகளுக்கு முரணானது என திமுக தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் !

மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பெ.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப்.10-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பெ.பழனி யப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், இளைய கலைஞர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தருமபுரி மேற்கு மாவட்ட (பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிகள்) தி.மு.க. செயற்குழு கூட்டம் 11.09.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் காரிமங்கலம், செல்வசாந்தி மஹால் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.மனோகரன், Ex.MLA



தலைமையில் நடைபெறும்.

அதுசமயம் கழக மறுசீரமைப்பு குழு தலைமை கழக பிரதிநிதிகள் தலைமை தீர்மானக்குழு துணைத் தலைவர் பார்.இளங்கோவன் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவரும், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ஜெயராம கிருஷ்ணன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்க உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பேரூர் கழக தலைவர்கள், துணை தலைவர்கள், முன்னாள் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் முன்னாள் பேரூர் கழக தலைவர்கள், துணை தலைவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள் கிறேன்.

பொருள்:

22.08.2026 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒன்றிய, பேரூர், கிளை கழக மறுசீரமைப்பு செய்வது குறித்தும்.

கழக முப்பெரும் விழா குறித்தும்,

கழக வளர்ச்சி பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கண்ணியமான அணுகுமுறை இல்லை!

முதல்வரின் 'உடல்மொழி' நாகரிகமற்றது!

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. கடும் கண்டனம்!

சென்னை, செப். 10-

மிசா கைது சம்பவத்தில் மு.க.ஸ்டாலின் குறித்து சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் விஜய், கைகளை தாடைக்கு அருகே கொண்டு சென்று காட்டிய சைகை பெரிதும் சர்ச்சையாகியுள்ளது. இதற்கு இடதுசாரி தோழர்கள் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், தற்போது வி.சி.க. தலைவர் திருமாவளவனும் கண்டனத்தை பதிவிட்டிருக்கிறார்.

வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

காவல்துறை மானியத்தில் முதல்வர் அவர்கள் ஆற்றிய பதிலுரையின்போது, தி.மு.க. தலைவரும் மேனாள் முதல்வருமான தளபதி ஸ்டாலின் அவர்களைக் கேலி செய்யும் வகையில் அவரது உடல்மொழி அமைந்திருந்ததாக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், முதல்வர் தரப்பில் 'அது உள்நோக்கம் கொண்டதல்ல' என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது.

எனினும், இதுபோன்ற 'உடல்மொழிகள்' கண்ணியமான அணுகுமுறை இல்லை என்பதையும் மனித மாண்புகளுக்கு எதிரானது என்பதையும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுட்டிக்காட்டுகிறோம். எந்தவொரு சூழலிலும் ஒருவரின் 'தன்மதிப்பைக்' குறைத்து மதிப்பிடுவதோ, காயப்படுத்துவதோ நாகரிகம் ஆகாது.

தனிநபர் ஒருவரின் மீதான அரசியல் விமர்சனங்கள் என்பது வேறு; தனிப்பட்ட முறையில் ஒருவரின் தன்மதிப்பைக் காயப்படுத்தும் விமர்சனங்கள் என்பது வேறு. கல்வி, பொருளாதாரம், அதிகாரம் போன்ற வலிமையில்லாத எளிய மனிதரையும்கூட காயப்படுத்தும் அணுகுமுறை ஒருபோதும் ஏற்புடையதில்லை.

அகவையில் மூத்தோரை மதிப்பது மனித மாண்புகளில் மிகவும் உயர்ந்ததாகும். எனவே, மாண்பு நிறைந்த ஒரு மகத்தான பொறுப்பிலுள்ள முதலமைச்சர் இனிவரும் காலத்தில் தனது உடல் மொழியில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நலம் பயப்பதாகும். முதல்வரின் பதிலுரையையொட்டி அடுத்தநாள் தி.மு.க. தரப்பில் முதல்வரின் உரையில் சில பகுதிகளை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது.

அமைச்சரின் கருத்து வரலாற்றுப் பிழையாகும்!

அந்த விவாதத்தின் போது இடைமறித்து சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து வரலாற்றுப் பிழையாகும். மிசா காலத்து அரசப்பயங்கரவாதம் எத்தகையது என்பது நாடறிந்த ஒன்றாகும். அந்தக் கொடிய ஒடுக்குமுறைக்குள்ளான தி.மு.க. தலைவர் குறித்து முற்றிலும் தவறான கருத்தினைப் பதிவு செய்தது கண்டனத்துக்குரியதாகும். அமைச்சர் அதனை திரும்பப் பெறுவதாக அறிவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தி.அ. முகமது சகி – எம்.பிரபாகரன் பங்கேற்பு! கரூர் மாவட்டம் முழுவதும்

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் - முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம் – வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரை!

கரூர்.செப்.10.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பேச அனுமதிக்காததையும், மக்கள் பிரச்சினைகளை எடுத்து கூறும் கழகத்தினர் மீது அவதூறு வழக்கு போடும் ரீல்ஸ் அரசைக் கண்டித்து கரூர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், தலைமைக் கழகப் பிரதிநிதிகள், தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி, பெரம்பலூர் நகரக் கழகச் செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ., எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரை யாற்றினார்.

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார்,

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் சூரியனூர் அ.சந்திரன், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதி செயலாளர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, க.சிவகாமசுந்தரி Ex.MLA, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி.கே.டி.ராஜ் கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, மத்திய பகுதி பொறுப்பாளர் விஜி எஸ்.குமார்,

வடக்கு பகுதி கழக பொறுப்பாளர் எம்.பாண்டியன், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் என்.செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர் Ex.MLA, தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, குளித்தலை நகரக் கழக செயலாளர் இரா.மாணிக்கம் Ex.MLA, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர க�கூ செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ண ராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தீர்மானம்:

கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படியும், 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படியும், தலைமை கழகப் பிரதிநிதிகள் தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அமுகமது சகி, பெரம்பலூர் நகரக் கழக செயலாளர் எம்.பிரபாகரன் Ex.MLA ஆகியோர் முன்னிலையில் பகுதி. நகர, ஒன்றிய, பேரூர் கழகம் மறுசீரமைப்பு செய்வதெனவும், மேலும் பகுதி ஒன்றிய நகரபேரூர் வார்டுகிளை கழக செயலாளர்கள் வயது வரம்பின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்திடவும் தீர்மானிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து எழுப்பிய கேள்விக்கு முறையாக பதில் அளிக்காத முதலமைச்சரின் அவதூறுப் பேச்சுக்கு பதில் அளிக்க, எதிர் கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்காத தவெ.க. அரசை இக் கூட்டம் வன்மையாக கண்டிக் கிறது.

தமிழ்நாட்டின் தற்போது நிலவி வரும் சட்ட – ஒழுங்கு பிரச்சினைகளையும், ரீல்ஸ் ஆட்சியை பற்றியும் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் எடுத்துரைக்கும் முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் மீது லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் காவல்துறை மூலம் பொய் வழக்கு போடும் த.வெ.க அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக் கிறது.

செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு அன்று காலை 10 மணிக்கு கரூர் பழைய பேருந்து நிலையம் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மாரியாதை செலுத்தும் நிகழ்ச்சியிலும், செப்டம்பர் 15 ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவிலும், கழக நிர்வாகிகள் கலந்து கொள்வதெனவும், மேலும் செப்டம்பர் 17 ஆம் தேதி பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்று காலை 10.00 மணிக்கு திருமாநிலையூர் ரவுண்டானாவில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்வது என இக்கூட்டதில் தீர்மானிக்கப்படுகிறது.

தி.மு.க முப்பெரும் விழாவில் பெரியார் விருது விவசாய அணி துணைச் செயலாளர் கு. செல்லப்பா அவர்களுக்கும், அண்ணா விருது சேலம் மத்திய மாவட்ட அவைத்தலைவர்.சேலம் ஜி.கே. சுபாஷ் அவர்களுக்கும், கலைஞர் விருது கழக துணை பொதுச் செயலாளரும். கழக மாநிலங்களவை குழுத்தலைவர் சிவா எம்.பி அவர்களுக்கும், பாவேந்தர் விருது கழக மருத்துவ அணித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கனமொழி என்.வி.என்.சோமு அவர்களுக்கும், பேராசிரியர் விருது தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா எஸ்.அகமது தம்பி அவர்களுக்கும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விருது இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா அவர்களுக்கும், முரசொலி செல்வம் விருது கலைஞர் தொலைக்காட்சி செய்திகள் பிரிவு தலைவர் ப.திருமாவேலன் அவர்களுக்கும், விருதுகளை அறிவித்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்து கொள்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மானாமதுரை நகர் மன்றத் தலைவர்

மாரியப்பன் கென்னடி தந்தை சோனைமுத்து மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 10-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

மானாமதுரை சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் மானாமதுரை நகர்மன்றத் தலைவரும் கழக ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளருமான மாரியப்பன் கென்னடி அவர்களின் தந்தையார் சோனைமுத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

ஓய்வு பெற்ற தலைமையாசிரியராகக் கல்விப் பணியாற்றி, தமிழ் மீதும், திராவிட இயக்கத்தின் மீதும் பற்றுகொண்டு திகழ்ந்த அன்புத் தந்தையை இழந்து வாடும் சகோதரர் மாரிமுத்து கென்னடி மற்றும் அவர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.